40

# அமெரிக்கா தலையிடுமா?

எஸ். எஸ். மாரிசாமி

பவள முத்திரை

10 அணா

தந்தி: எவரெஸ்ட் டெலிபோன்: 2894

சென்னைக்கு வரும் அதிதிகளின் நண்பர்



எவரெஸ்ட் சுந்தரம் தனது

# ஹோட்டல் எவரெஸ்டை

(போர்டிங், லாட்ஜிங்)

உங்கள் சேவைக்கும் திருப்திக்குமாக இன்னும் 110 விசாலமான அறைகளுடன் விரிவுப்படுத்தி யிருக்கிறார்

கலைவள்ளல் சுந்தரம் இந்த ஹோட்டலை தென்னிந்தியாவிலேயே மிகச் சிறந்ததாக செய்திருக்கிறார். காற்றோட்டமுள்ள அறைகள், சுகாதார வசதிமிகுந்த இடம். எம். எஸ். எம். அண்டு, எஸ். ஐ. ஆர். ரயில்வே ஸ்டேஷன்களுக்கு அருகில் உள்ள கம்பீரமான இடம்

எவரெஸ்ட் என்றதும் எல்லோருக்கும் தெரியும்

தங்கள் வருகை எதிர்பார்க்கப்படுகிறது

பவள முத்திரை: II

# அமெரிக்கா தலையிடுமா?

எஸ். எஸ். மாரிசாமி

தமிழ்நாடு பிரசுரம் கம்பெனி,
2-ஏ, பூந்தமல்லி ஹைரோடு, பி. டி., சென்னை.

தேச பக்தியை நல்ல லாபம் தரும் சரக்காக மதித்து, செய்தி-வர்த்தகம் நடத்தத் தயங்காத முத லாளி - சுரண்டெலிகளின் இருகு தாள தாண்டவங் களை வெட்ட வெளிச்ச மாக்குவதையே பிரதான நோக்கமாகக்கொண்ட பத் திரிகையாளர்களின் பிர சுரம். சமீபத்தில் ஒரு தமிழ் தினசரியிலிருந்து வெளியே வந்த பத்திரிகை யாளர்கள் யாவரும் பிரதி மாதமும் ஒரு புஸ்தகம் எழுதுவார்கள்.

முதற் பதிப்பு, ஜனவரி 1944
பதிப்புரிமை

மகாத்மா காந்தியின் வலது கரமாக விளங்கி, தேசத்துக்காக சிறை வாசம் மேற்கொண்டு, சிறையிலேயே உயிர் நீத்த தியாகி மகாதேவ தேசாய் ஞாபகார்த்தத்துக்கு இந் நூல் சமர்ப்பணம்.

எஸ். எஸ். மாரிசாமி

28—1—'44.

# 1. ஜனநாயக மாயை!

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அழிவிற்காக நான் பிரதம மந்திரியாக வரவில்லை......பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்தபடியே இனியும் இருக்கும். நம் கையிலுள்ளதை விட்டுவிடவே மாட்டோம்."

ராஜதந்திர பாஷையில் அமைந்திருக்கும் மேற்குறிப்பிட்ட வாக்கியங்கள் சர்ச்சிலால் கூறப்பட்டவை. வாக்கியங்களின் வார்த்தைகள் ஒன்றோடு ஒன்று பின்னிக்கொண்டு, சாதுரியமாக அமைக்கப்பட்டிருந்தாலும் நமக்கு அர்த்தம் ஒன்றே ஒன்றுதான். அதுவும் தெளிவானது. மறுக்க முடியாததுங்கூட. அதாவது இந்தியாவின் அடிமை நிலைமைக்கு விமோசனமில்லை. பிரிட்டனுக்கே தாராள புத்தியும் பரந்த நோக்கமும் ஏற்பட்டால் ஒழிய இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைக்காது. இதுதான் சர்ச்சிலின் கொள்கை. தம் கொள்கையை நிறைவேற்ற சர்ச்சில் ரத்தம் சிந்தவோ, கண்ணீர் வடிக்கவோ தயங்கமாட்டாரென்பது நமக்குத் தெரியும்.

சர்ச்சில் இவ்வாறு தம் கொள்கையை தெளிவாகக் கூறியதும் சிலருக்கு ஆச்சரியமாயிருந்தது. உலகமே அதி தீவிரத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும்பொழுது, ஏகாதிபத்தியமாவது மண்ணாங்கட்டியாவது என்று சிலர் முணுமுணுத்தார்கள். இந்தியாவின் ஜன்ம விரோதி சர்ச்சில் என்று ஏதோ புதுமையாகக் கண்டுபிடித்ததுபோல சிலர் அவரைத் தூஷிக்கவும் செய்தார்கள். "இந்தப் பாழாய்ப் போன கொள்கையை இந்த சமயத்தில்தானா சொல்லித் தொலைப்பது" என்று சில பொதுவுடைமை வாதிகள்

வருந்தினார்கள். 'பொதுஜன யுத்தம், ஏகாதிபத்திய வெறி கொண்ட சர்வாதிகாரப் பூண்டுகளை அடியோடு ஒழிக்கும் யுத்தம்' என்று கோஷித்து வந்த பொதுவுடைமை வாதிகளின் வாதங்களை எல்லாம் சர்ச்சில் அரை நொடியில் பறக்கடித்துவிட்டாரே என்பதுதான் அவர்களின் வருத்தத்திற்குக் காரணம். இருந்தாலும் அவர்கள் வெற்றிகரமாக சமாளித்துக்கொண்டார்க ளென்பதை நாம் இங்கு கூறு விட்டால் அவர்களது வாக்கு சாதுர்யத்தை மதிக்காதவர்கள் என்ற பழிக்கு ஆளாவோம். அவர்களது வெற்றிகரமான சமாளிப்பு சுதந்திரப் போராட்ட சரித்திரத்தில் இடம் பெறத்தகுந்தது!

சர்ச்சிலின் கொள்கையைக் கண்டு மலைப்போ, எரிச்சலோ, அவஸ்தையோ படவேண்டிய அவசியமே இல்லை. சர்ச்சில் இவ்வளவு பகிரங்கமாக, இந்த நெருக்கடியான சமயத்தில், பிரிட்டிஷ் சர்க்காரின் வழக்கமான வழவழா பாஷையை விட்டுவிட்டு தெள்ளத் தெளிய, தம் கருத்தை வெளியிட்டதற்காக அவரை நாம் பாராட்டவேண்டும். அவரது வீரத்தையும் வெள்ளை மனத்தையும் புகழ வேண்டும். வீணாக மனக்கோட்டை கட்டி மாளவேண்டாமென அவர் வழி காட்டியதற்காக அவருக்கு நாம் என்றென்றும் நன்றி செலுத்தவேண்டும். மேலும், பிரிட்டனில் மட்டும் ஒரு சர்ச்சிலைப் படைத்த அந்த தேவ குமாரன், இந்தியாவிலும் முக்கியமாக பொதுவுடைமை, மிதவாத வட்டாரங்களிலும் ஏன் பல சர்ச்சில்களை படைக்கவில்லையென்று மனம் புழுங்கவேண்டும். மனம் வருந்துபவர்களுக்கு உதவி செய்யும் அந்த ஏசுகிறிஸ்து நம் முறையீட்டுக்கும் செவி சாய்க்காமல் போகமாட்டாரென்ற நம்பிக்கை நமக்கு உண்டல்லவா ?

சர்ச்சில் பிரிட்டனின் பிரதம மந்திரி. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சர்க்காரின் மாபெரும் யுத்தத்தை நடத்துகிறவர். ஏகாதிபத்திய வெளிநாட்டு, உள்நாட்டு கொள்கையை நிர்ணயம் செய்பவரும் சாக்ஷாத் சர்ச்சில்தான். அதோடு பிரிட்டிஷ் மன்னர் சர்க்கார் எதிர்காலத்தில் என்னவிதமாக நடக்கவேண்டுமென்பதற்காக திட்டங்களையும் முறைகளையும் வகுப்பவர் சர்ச்சில். ரத்னச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் பிரிட்டிஷ் மன்னர் சர்க்காரின் லகான், சர்ச்சிலின் திருக்கரங்களில் சிக்கியிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட ஒரு பொறுப்பான அந்தஸ்தில் இருப்பவர், இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும்படியான ஒரு விஷயத்தை இவ்வளவு தைரியமாக முன்வந்து, எதிர்ப்பைக்கூட மதிக்காது சொல்லுவாரேயானால், அவரை எப்படி பாராட்டாமலிருக்கமுடியும்? இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் என்றென்றும் அமரத்துவம் பெற்ற அடிமை நிலையில் இருக்கவேண்டுமென்பதுதான் ஒவ்வொரு பிரிட்டிஷ்காரனின் நோக்கம். சவுத்தாம்டன் க்ஷவரக் கடை தொழிலாளியிலிருந்து, சஸக்ஸ் தொகுதியின் காமன்ஸ் சபை பிரதிநிதிவரை இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறான். இந்த கருத்தின் மனித அவதாரம் தான் சர்ச்சில். இக்கருத்தை பரப்பவும் சாத்தியமானால் நடைமுறையில் கொண்டுவரவும் அவர் தயங்கவே மாட்டார். கொள்கையை விட்டுக்கொடுக்கும் வழக்கம் சர்ச்சிலிடம் லவலேசமும் கிடையாது. ரஷ்யப் பொதுவுடைமை வாதிகளை காட்டுமிராண்டிகள்—மூர்க்கத்தனமிகுந்த அரக்கர்கள்—என்றெல்லாம் நாகரிகமான பாஷையில்—சமாதான ரீதியில் சதா அர்ச்சனை செய்துகொண்டிருந்த சர்ச்சில், ரஷ்யாவுக்கு செல்லவில்லையா? ஸ்டாலி

லைப் பேட்டி காணப் போகவில்லையா? என்று கேட்கலாம். அன்றிருந்த ஸ்டாலின் வேறு—இன்றிருக்கும் ஸ்டாலின் வேறு—பழைய ரஷ்யாவுக்கும் இப்பொழுதைய ரஷ்யாவுக்கும் வித்தியாசம் ரொம்ப அதிகம் என்பதுதான் இதற்குப் பதில். மேலும் ரஷ்யா வேறு இந்தியா வேறு என்பதை சர்ச்சில் எப்படி அறியாமலிருப்பார்?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே மிரட்டும்படியான இந்த 2-வது மகா யுத்தம் ஆரம்பமானதும், ஏகாதிபத்திய சேவை செய்ய சர்ச்சில் பதவியை ஏற்றார்.

அந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சேவையில் இந்தியாவின் கதியும் அடங்கியிருக்கிறது. அதாவது இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிணைப்பிலிருந்து விடுதலைபெறாமலிருக்கவேண்டுமென்ற கருத்தை நிறைவேற்றி வைப்பதும், அந்த சேவையில் உள்ளடங்கியதுதான். பிரிட்டனிடமிருந்து இந்தியா சுதந்திரமடைந்து விலகிக்கொண்டு விட்டால் அது பிரிட்டனுக்கு நஷ்டம். இவ்வளவு நாளாக அனுபவித்துவந்த ஏகபோக பாக்கியங்களை கைவிடவேண்டி ஏற்படாதா? அதோடு பிரிட்டிஷ் உற்பத்திகளை கரையேற்றிவைக்க தக்க மார்க்கட்டுதான் வேண்டாமா? இந்தியாபோன்ற வேறு ஒரு மார்க்கட்டு, இந்த யுத்த முடிவில் கிடைக்கலாமென்பதற்கு என்ன அத்தாட்சி? ஆகவே இந்தியா ஏகாதிபத்திய ஐக்கியத்திலிருந்து விலகிக்கொள்ளக் கூடாது. அவ்வாறு விலக அனுமதித்தால் பிரிட்டனின் பொருளாதார நிலை வெகுவாக பாதிக்கப்படும். பொருளாதார நிலை சீர்குலைந்தால், பிரிட்டன் என்ன ஆகும்?

ஆகவே ஜெர்மனியை தோற்கடிப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபடி இந்தியாவை 'காப்பதும்' அதி முக்கி

யம். இதை மிக நன்ருக அறிந்தவர் சர்ச்சில். இக்கொள்கையை அவர் எப்படி எளிதில் கைவிட முடியும்? அப்படியானல் இந்தியாவுக்கு கதி மோட்சமே கிடையாதா என்று கேட்கலாம். உண்டு.

பிரிட்டன் விரும்புகிறபடி இந்தியா இருக்கவேண்டும். அதன் பிறகு அவர்கள் இந்தியா தன்னைத்தானே ஆளத் தகுதி வாய்ந்ததா என்று பார்ப்பார்கள். தகுதி வாய்ந்தது என்பதை அறிந்ததும் பிறகு சுயராஜ்யமோ, அல்லது சுயராஜ்யத்திற்கு முன் பீடிகையாக தேசிய சர்க்காரையோ ஏற்படுத்துவார்கள். இதுதான் பிரிட்டிஷ் சர்க்காரின் திட்டமான கொள்கை. இந்தியா எப்படி இருக்கவேண்டுமென பிரிட்டன் விரும்புகிறது என்று கேட்கலாம். இதற்கு நேரிடையான—திட்டமான பதில் இதுவரை பிரிட்டிஷ் ராஜதந்திரிகளாலேயே கூறமுடியவில்லை. ஒரு சமயம் ஒற்றுமை என்பார்கள். மற்றொரு சமயம் மைனாரிட்டி வகுப்பாரின் நலன்கள் என்பார்கள்; வேறொரு சமயம் தங்களை நம்பி இருக்கும் சமஸ்தானங்களின் கதியைப்பற்றி பேசுவார்கள்; இன்னும் சில சமயங்களில் பதிலே கூருமலும் இருப்பார்கள். இதெல்லாம் அதிகார வர்க்கத்தின் மன நிலையையும், சமய சந்தர்ப்பங்களையும் பொருத்த விஷயங்கள். யாராவது ரொம்ப வற்புறுத்திக் கேட்டால், கடுரமாக யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் இதைப்பற்றி நினைப்பதுகூட தவறு என்று கூறுவார்கள். இந்த 'சிறு' வேலையை எல்லாம் அவர்களால் எப்படி கவனித்துக்கொண்டே இருக்கமுடியும்? மேலும் இந்த 'அற்ப' விஷயங்கள் பற்றி எல்லாம் கவனித்து அவ்வப்போது வேண்டிய காரியங்களை செய்துவரும் பொறுப்பு குட்டி தெய்வங்களின் வசம்தான் ஒப்படைக்கப்படும்.

ஏதாவது நிலைமை முற்றி, காரியம் மிஞ்சும்போலிருந்தால் யாராவது ஒருவர் சமாஸத் தூதராக அனுப்பி வைக்கப்படுவார். அவர் யார் என்று தெரிய பல ஹேஷ்யங்கள் வரும். அதன்பிறகு அவர் பயணப் படலம். இதற்குள் மாதம் ஒன்ரே, இரண்டோ ஆகலாம். வரும் தூதர் இந்தியாவின் பண்டைய கலாச்சாரங்களைப்பற்றி சாங்கோபாங்கமாக ஒரு பிரசங்கம் செய்வார். பிறகு தலைவர்களை சந்திக்கும் சடங்கு. இதுவும் 2 வாரத்துக்கோ, 2 மாதத்துக்கோ இழுத்துக்கொண்டு செல்லும். கடைசியில் வந்தவர் முழு நீள அறிக்கையையும் பல புதுப் பிரச்னைகளையும் கிளப்பி விட்டுவிட்டுச் செல்வார். இவையெல்லாம் ஒழுங்கு தவருமல் நடக்கும் காரியங்கள்.

சில சமயம் கமிஷன் நாடகம் நடக்கும். இன்னும் சில சமயங்களில் சீர்திருத்தம் என்ற கண் துடைப்பும் நடப்பதுண்டு. இந்தியா இதைக்கண்டு அலுத்துவிட்டது. கமிஷன், தூது, சமாஸப் பேச்சு என்பனவெல்லாம் வெறும் புளித்துப்போன வார்த்தைகள்; சூடு சுரணை அற்ற வார்த்தை அலங்காரம் என்பது அரசியல் அரிச்சுவடி படிக்கும் மாணவனுக்குக்கூட தெரிந்த விஷயமாகிவிட்டது. ஆகவே பிரிட்டன் விரும்பினுல்தான் இந்தியாவுக்கு கதி மோட்சம். அப்படி பிரிட்டன் விரும்புவதெப்போது?

நிற்க, சர்ச்சில் இந்த சமயத்தில் மற்ருெரு நல்ல காரியத்தையும் செய்தார். இந்தியரின் மாயையை கலைத்து உணர்ச்சியை ஓரளவுக்கு அளித்தது சர்ச்சில்தான். அட்லாண்டிக் சாஸனம்பற்றி இந்தியா கொண்டிருந்த 'தப்பெண்ண'த்தை அவர் திருத்தின பெருமையே பெருமையாகும்.

அதோடு மகாத்மா காந்தியையும் காங்கிரஸையும் நாக்கில் நரம்பில்லாமல் திட்டிக்கொண்டிருந்தவர்களின் கொடூரத்திலிருந்தும் அவர் காப்பாற்றினார்.

"தங்களுக்குப் பிடித்தமான சர்க்காரை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை ஒவ்வொரு நாட்டினருக்கும் உண்டு. எதிரியின் பலாத்காரத்தினால் எந்த ஒரு நாடு தனது சுயராஜ்யத்தையும், ஆதிபத்திய அந்தஸ்துகளையும் இழந்ததோ, அந்த நாடு அவைகளை திரும்பப் பெற்றாக வேண்டுமென்பதே எங்களது நோக்கம்"

சர்ச்சிலும் அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் **1941**-ம் வருஷம், ஆகஸ்டு மாதம் அட்லாண்டிக்கில் சந்தித்து தயாரித்த சாஸனத்தின் 3-வது ஷரத்து மேற்கண்டவாறு கூறுகிறது.

'இந்த சாஸனம் வெளியான 2-வது நாள் பிரிட்டிஷ் உதவி பிரதம மந்திரியான ஆட்லி ஒரு கூட்டத்தில் பேசினார். தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்த ஒரு படையினருக்கு வரவேற்பளிக்க அக்கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

"எங்களுக்கு (பிரிட்டிஷாருக்கு) எந்த சுதந்திரம் வேண்டுமென்று கூறுகிறோமோ, அதே சுதந்திரத்தை எல்லா ஜனங்களுக்கும் தரவேண்டுமென்று தொழிற் கட்சியினராகிய நாங்கள் கூறுகிறோம். சர்ச்சிலும், பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் வியாழக்கிழமை கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கும் அட்லாண்டிக் சாஸனம் எல்லா ஜாதியினருக்கும் உண்டு. ஆசியா—ஆப்பிரிக்கா தேசத்து மக்களுக்கும் உண்டு."

ஆட்லியின் இந்தப் பிரசங்கம் உலகம் முழுவதுக்கும் அனுப்பப்பட்டது. வெறும் வாயை மெல்லும் இந்திய பொதுவுடைமைவாதிகள் இந்தப் பிரசங்கத்தை வைத்துக் கொண்டு "பொதுஜன யுத்தத்திற்கு உதாரணம் இதோ" என்று சொன்னார்கள். இந்திய மிதவாதிகளும் மனம் பூரித்தனர். அந்த பூரிப்பு அறிக்கை ரூபமாக அடிக்கடி வெளியில் தலையை காட்டிக்கொண்டே இருந்தது.

இந்தியாவுக்கும் அட்லாண்டிக் சாஸனம் உண்டு என்று பத்திரிகைகளில் ஹேஷ்யங்கள் வந்தவண்ணமாகவே இருந்தன. பிரிட்டனின் உதவிப் பிரதம மந்திரியே, ஆசியாக்காரர்களுக்கும் உண்டு என்று சொல்லிவிட்டாரே என்று பலர் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தனர். பிறகு என்ன நடந்தது என்பதுதான் ரொம்ப ரஸமான விஷயம்.

அட்லாண்டிக் பேட்டியை முடித்துக்கொண்டு ஊர் திரும்பிய சர்ச்சில், சாஸனத்தைப்பற்றி ஆகஸ்டு மாதம் வாய் திறக்கவேயில்லை. செப்டம்பர் மாதம் 8-ம் தேதிதான் நல்ல நாளென்று கருதி காமன்ஸ் சபையில் சாஸனத்தின் மகிமையைப்பற்றி பேச ஆரம்பித்தார். அதை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தார் வெகு அழகாக இந்தியாவுக்கு அனுப்பிவைத்து பேருதவி செய்தார்கள். அதை அப்படியே இங்கு தருவது அனாவசியமாகாதல்லவா ?

"அட்லாண்டிக் சாஸனம் எங்தெந்த நாடுகளுக்கு சேரும் என்று கிளம்பியிருந்த வதந்திகள்—ஹேஷ்யங்களுக்கெல்லாம் சர்ச்சில் ஒரு முற்றுப்புள்ளி போட்டுவிட்டு, இன்றிரவில் காமன்ஸில் பேசினார்...

'இந்தியா, பர்மா இன்னும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழுள்ள நாடுகளின் சட்ட ரீதியான சர்க்கார்கள் பற்றி, அப்போதைக் கப்போது மன்னர் சர்க்கார் தம் கொள்கையை விளக்கி, வெளியிட்டு வந்திருக்கும் அறிக்கைகளை - பிரகடனங்களை - இந்த அட்லாண்டிக் சாஸனம் எந்த வகையிலும் மாற்றாது.

'அட்லாண்டிக்கில் நானும் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டும் சந்தித்த சமயம், எங்கள் மனதில் பிரதானமாக நாஜிகள் பிடித்திருக்கும் நாடுகளின் ஆதிபத்திய உரிமையும், சுயராஜ்யமும், தேசிய வாழ்வும் தான் இடம் பெற்றிருந்தன.

'பிரிட்டிஷ் மன்னருக்கு ராஜ விசுவாசமாக இருக்கும்........நாடுகளின் விஷயம் ஒரு தனிப்பட்ட பிரச்னையாகும்."

சர்ச்சிலின் இப்பிரசங்கம் இந்தியாவின் மனக்கோட்டையை தவிடு பொடி யாக்கியது. அட்லாண்டிக் சாஸனத்துக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தமே கிடையாது என்று அவர் கூறியதும் தேசத்தில் கிளம்பின எதிர்ப்புகளுக்கும் கண்டனங்களுக்கும் கணக்கு வழக்கு உண்டா? எதிர்ப்புகளும் கண்டனங்களும் ஏதாவது பலனை ஏற்படுத்தினவா என்று கேட்டால், பலன் பூஜ்யந்தான். மலாய், சிங்கப்பூர் பர்மா முதலிய நாடுகள் ஜப்பான் வசம் சென்றும் சர்ச்சிலோ அல்லது அவரது சகாக்களோ அட்லாண்டிக் சாஸனம் பற்றி கூறின வியாக்யானத்தை துளிக்கூட மாற்றவில்லை. மாற்றப் போவதுமில்லை என்பது நமது முடிவான கருத்து.

"இல்லை மாற்றுவார்கள்" என்று சிலர் கூறலாம். "பிரிட்டன் இந்தியா விஷயத்தில் கொள்கையை மாற்றிக்

கொள்ளும். அமெரிக்காவின் தலையீட்டின்பேரில் இந்தியாவுக்கு சமாதான மகாநாட்டிலாவது சுயராஜ்யம்கிடைத்து விடும். இந்த ராஜீய நெருக்கடியும் ரொம்ப காலத்துக்கு நீடிக்காது" என்பன போன்ற பேச்சுகள் அடிபடுகின்றன.

அமெரிக்கா இந்தியா விஷயத்தில் தலையிடுமென்ற நம்பிக்கையும் சில வட்டாரங்களில் ஏற்பட்டு வருகிறது. அமெரிக்கா இந்திய விஷயத்தை ரொம்ப உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் கூறுகிறார்கள். கர்னல் லூயி ஜான்ஸனும், பிலிப்ஸும் இதே காரணத்துக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்களென்றும் சிலர் வாதிக்கிறார்கள். சமாதான மகாநாட்டிலாவது அமெரிக்கா இந்தியாவைக் குறித்து பேசும் என்பது பலரின் நம்பிக்கை.

இந்திய - பிரிட்டிஷ் ராஜீய தகராறில் அமெரிக்கா தலையிட்டு, இருந்துவரும் முட்டுக்கட்டையை நிவர்த்திக்கும் விஷயத்தில் சந்தோஷம். ஜனநாயக கொள்கையை கடந்த 160 வருஷ காலமாக அனுஷ்டித்து வரும் அமெரிக்கா இந்த நெருக்கடியை தீர்க்கத் தலையிட்டால் இந்தியர் அதை வரவேற்கவும் தயார்.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையே சமரஸம் பேசி பார பட்சமற்ற ஒரு தீர்ப்பை அமெரிக்கா அளிக்குமானால் அதை ஏற்று நடக்கவும் இந்தியா சித்தம் கொண்டிருக்கிறது. ஆனால், அமெரிக்கா தலையிடுமா? பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சமரஸம் செய்து வைக்க முன் வருவாரா?

## 2. அமெரிக்காவும் இந்தியாவும்

அட்லாண்டிக் சாஸனம் உலகம் முழுவதுக்கும் சேர்ந்தது என்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறுகிறார். உலக சுதந்திரத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் அமெரிக்கா போராடுகிறது என்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஜப்பான் யுத்தம் ஆரம்பமானதிலிருந்தே கூறி வருகிறார். பேச்சுரிமை—மத உரிமை—தேவையின்மை—பயமின்மை ஆகிய 4 சுதந்திரங்களையும், உலக மக்கள் முழுவதும் இந்த யுத்தத்தின் முடிவில் பெற்றிருக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் கொள்கையாம். இதை ஒரு தடவைக்குப் பல தடவை ரூஸ்வெல்ட் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க உதவி பிரஸிடெண்டான ஹென்ரி வாலஸ் எதிர்காலம் பற்றி கூறுவது, எல்லோருடைய கற்பனையையும் மீறியதாகும். ஏழை - பணக்காரர் என்ற பேதா பேதமோ, அதிகாரவர்க்கம் ஏழை மக்களை கசக்கிப் பிழியும் அநாகரிகமோ எதிர்கால உலகில் இருக்காது என்று வாலஸ் அறிவிக்கிறார்.

இக்கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர அமெரிக்க சர்க்கார் தீவிரமான நடவடிக்கைகளை யுத்தத்தின் முடிவில் எடுக்கவேண்டுமென்றும் அவர் கோருகிறார்.

அதோடு மட்டும் வாலஸின் எதிர்கால உலக புனருத்தாரணம் நின்றுவிடவில்லை. 'பிற்போக்கான நாடுகள் என்று வைக்கப்பட்டிருக்கும் நாடுகள் முற்போக்கடைந்து, இதர சர்வ தேசங்களுடன் சரி சமத்துவ நிலைமையை அடைய பெரிய வல்லரசுகள் பாடுபட வேண்டும். அவசிய

மேற்பட்டால் பொருளாதார வகையிலும் உதவி அளிக்க வேண்டு'மென்று அவர் வற்புறுத்துகிறார்.

சுருங்கக் கூறினால் வாலஸ் காணும் எதிர்காலம் ரொம்ப முற்போக்குக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. ஏகாதிபத்தியம் என்ற செத்துப்போன வார்த்தையோ, தர்மகர்த்தா பொறுப்பு என்ற பித்தலாட்டமோ அதில் துளிக்கூட இல்லை.

அமெரிக்க பிரஸிடெண்ட் தேர்தலுக்கு போட்டியிட்ட வெண்டல் வில்கியின் எதிர்கால திட்டம் வாலஸின் திட்டத்துக்கு எந்த வகையிலும் சளைத்ததல்ல. அவர் காணும் உலகில் கலவரமோ, பிறரை சுரண்டி வாழும் வழக்கமோ, பிரித்தாளும் முறையோ, மற்றவர் 'நலனுக்காக' ஆளும் தாராள கன்சர்வேட்டிவ் கொள்கையோ மருந்துக்குக்கூட கிடையாது. வில்கி இக்கொள்கையை அநேகம் தடவை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். சர்வாதிகார வெறி கொண்ட தலைவர்களையும், தந்திரத்தில் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாளும் சர்வதேச சமாதான தர்மகர்த்தாக்களையும் அவர் ஒரு முறைக்கு பலமுறை தெளிவான பாஷையில் எச்சரித்து விட்டார்.

அமெரிக்கா இரவு பகலாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த சமயத்தில் எதிர்காலம்பற்றி அமெரிக்காவில் பொறுப்பு வாய்ந்த சிலர் சிந்திப்பதும், சிந்திப்பதை வெளியில் கூறுவதையும் கண்டு அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அப்படியானால் அமெரிக்கப் பிரமுகர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் ஏகாதிபத்தியம்

பற்றி கொண்டிருக்கும் கருத்துக்கும் வித்தியாசமில்லையா என்று கேட்கலாம். இரு தேசங்களின் யுத்த லட்சியங்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டிருக்கவில்லையா என்றும் கேள்வி போடலாம்.

ஆம். அமெரிக்கத் தலைவர்கள் பேசி வருவதற்கும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி உள்பட இதர அதிகாரிகள் பேசி வருவதற்கும் வித்தியாசங்கள் - முரண்பாடுகள்—இருக்கத் தான் செய்கின்றன. அதோடு இரு தேசங்களுக்கு மிடையே எதிர்காலம்பற்றி அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருப்பதாகக்கூட தோன்றும்.

ஆனால் அமெரிக்கா தம் கொள்கையைப்பற்றி பிரசாரம் செய்வதில் தயங்கக் காணோமே என்பதும் மனதில் படும். பிரிட்டனும் தம் ஏகாதிபத்திய எதிர்காலக் கொள்கையை விடாமல் பிரசாரம் செய்து வருவதும் நமக்கு தோன்றாமல் போகாது.

அப்படியானால் எவ்வாறு இவ்விரு நாடுகளும் நேச தேச நாடுகளாக இருக்கின்றன? இரு தேசத்தியவர்களும் எப்படி அடிக்கடி கூடி சம்பாஷித்து 'அபிப்பிராய ஒற்றுமையுடன் கூடிய முடிவுகளுக்கு' வர முடியும்? இரு சர்க்கார்களும் என்னவிதமாக பரஸ்பர உதவிகளை அனுப்பிக் கொண்டிருக்க முடியும்? இருதேசத்து படைகளும் எந்த வகையில் லிபியாவிலும், டூனிஸியாவிலும், ஸிஸிலியிலும் யுத்தத்தை தோளோடு தோள் நின்று நடத்தியிருக்க முடியும்?

இந்தக் கேள்விகளெல்லாம் பலருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம். இதெல்லாம் என்ன அபத்தம் என்று

கூட சிலர் கூறலாம். ஆனால் யுத்தகாலத்தில் இவையெல்லாம் சகஜம். யுத்த சமயத்தில் ஆச்சரியத்துக்கும் அபத்தத்துக்கும் அளவே கிடையாது. மேலும் அவை சர்வ சாதாரண விஷயங்கள். நித்திய சம்பவங்கள். உதாரணத்திற்காக வேண்டுமானால் இதைக் கூறலாம்.

யுத்தம் ஆரம்பமானதுமே சிலருக்கு ஆச்சரியமாயிருந்தது. யுத்தமா என்று கூட சிலர் கேட்டார்கள். இதை கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'அம்ருதபஜார்' என்னும் பத்திரிகை வெகு அழகாக ஒரு சந்தர்ப்பத்தில் எடுத்து சொல்லியிருக்கிறது.

> "பெரிய பெரிய ஜெர்மன் தொழிற்சாலைகாரர்களோடு ஒப்பந்தம் செய்திருந்த பிரிட்டிஷ் முதலாளிகள்—அடால்ப் ஹிட்லரின் தேசிய சோஷியலிஸ்டுக் கட்சியை ஆதரித்தும் பணவுதவி கொடுத்து தட்டிக் கொடுத்தும் வந்த பிரிட்டிஷ் முதலாளிகள்—முக்கியமாக மூனிச் சம்பவ நிழலில் காட்டிக் கொடுத்த அந்த பிரிட்டிஷ் முதலாளிகள்,போலந்தின் ஏகத்தன்மையை காப்பாற்றுவதற்காக ஜெர்மனியுடன் போரைத் துவக்கும் அளவுக்கு சென்றிருப்பார்கள் என்பதைப் பார்க்குமிடத்து அது ஆச்சரியமாகவும் அபத்தமாகவும் தோன்றியது. யுத்தம் ஆரம்பமான அந்த சமயத்தில் போலந்து அரைப் பாஸிஸ நாடாகத்தானே இருந்தது !"

[1942—செப்டம்பர்—4 - ம் தேதி தலையங்கம்]

பிரிட்டன் ஜெர்மன்மீது போர்தொடுத்தது எவ்வளவு ஆச்சரியமற்ற விஷயமோ, அதேபடிதான் பிரிட்டனும்

அமெரிக்காவும் நெருங்கி இருந்து போர் புரிவதும், அபிப் பிராய ஒற்றுமையுடன் கூடிய முடிவுகளுக்கு வருவதும் ஆச்சரியமற்ற விஷயங்கள். ஆனால் அமெரிக்காவின் இதர கொள்கைகள் என்ன விதமாக இருந்தாலும், இந்தியாவை அமெரிக்கா கைவிட்டுவிடாது என்று கூறப்படுகிறது. இதற்கு ஆதாரமாக இந்தியாவில் அமெரிக்க சைன்யங்கள் இருப்பதை சுட்டிக்காட்டி, அவர்களின் நன்மைக்காக வாவது அமெரிக்கா, பிரிட்டனிடம் இந்தியாவைக் குறித்து பேசும் என்று சொல்லுகிறார்கள். அமெரிக்கா இந்தியா வைப் பற்றி கொண்டிருக்கும் அநுதாபம் ரொம்ப ஜாஸ்தி யென்று, அமெரிக்காவிலிருந்து திரும்பிய பலர் கூறியிருப் பதையும் எடுத்துக் காட்டுகிறார்கள். பிரபல ஆசிரியர்கள் 'இந்தியா அமெரிக்காவின் சொந்த விஷயம்' என்று சமீபத்தில் எழுதியிருந்ததும் எடுத்துக் காட்டப்படுகிறது.

பிரிட்டனிடம் இந்தியா கொண்டிருக்கும் அவநம்பிக் கையை, சர்ச்சிலின் சிங்காரப் பேச்சு துளிக்கூட போக்க வில்லை என்று அவர்கள் கூறி, அமெரிக்கா தலையிடவேண்டு மென்று கூறுகிறார்கள். பிரிட்டன் இந்தியாவுக்கு சுயராஜ் யம் கொடுக்க மறுத்து அதற்கான ஜோடனை காரணங்களை கூறிவருவதையும் அவர்கள் விளக்கி யிருக்கின்றனர்.

நோபல் பரிசு பெற்றவரும் பிரசித்தி பெற்ற நாவ லாசிரியையுமான ஸ்ரீமதி பெர்ல்பக், கீழ்க்கோடியில் வெள்ளையர் காட்டிவந்த நிறத்திமிர் பற்றி குறிப்பிட்டு விட்டு, "சீனரும் இந்தியரும் நேசநாடுகளின் சகாக்கள். இவர்களனைவரும், வெள்ளையர் தங்களை நாளை எப்படி நடத்தப்போகிறார்களோ என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். இவர்களுக்கு சரிசமத்துவநிலை கொடுக்கவேண்டும். 'வெள்

ஸீயருக்கு மட்டும் தனி சலுகை காட்டக்கூடாது. இதை உடனே சொல்லாமல் தள்ளிப் போட்டுக்கொண்டு வருவது தன் பலன் பாதகமாக முடியும். அமெரிக்கா இந்தியா விஷயத்தில் தலையிடவேண்டும்" என்று அறிவிக்கிறார். கருப்பர்களுக்கு சுதந்திரம் உண்டு என்று இன்றே அறிவிக் காவிடில் சமாதானம் நிலைப்பது சாத்தியமில்லை என்பதை யும் ஸ்ரீமதி பெர்ல்பக் அறிவிக்காமலில்லை.

சீன எழுத்தாளரும், பெரும் சிந்தனையாளருமான லின்யூடாங் இந்தியாவைக் குறித்து, அமெரிக்காவுக்கு அறிவுறுத்தி யிருக்கும் விஷயமும் மகா முக்கியமான தாகும்.

" இந்தியாவில் நிகழ்ந்துவரும் விஷயங்களை நாம் ஆராயவேண்டியது அவசியமும் அவசரமுமாகும். வெறும் வீண் விதண்டாவாதக்காரர்களென்ற முறையில் இல்லாமல், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் நடக்கும் இந்த தகராறில் பொறுப்பு வாய்ந்த சகாவாக இருந்து நாம் ஆராய வேண்டும்.

'காங்கிரஸ் இந்தியாவின் பிரதிநிதி அல்ல என்ற கட்டுக் கதையையும், முஸ்லிம்கள் காங்கிரஸில் கிடையாது என்ற பொய்யையும், ஜின்னு சாகிபே ரொம்ப முக்கிய மானவர், வெள்ளைக்காரர்கள் அங்கு வெகுவாக நேசிக்கப் படுகிறார்கள் என்பதையும் நமது மனச்சாந்திக்காக ஏற்றுக்கொள்ளலாம்.

'ஆனல், இந்த கட்டுக்கதையை ஏற்பதன்மூலமும், கிரிப்ஸ் தூது முறிந்ததின் பிறகு ஏற்பட்ட சம்பவங்களைக் கண்டு நாம் பேசாமலிருந்ததாலும் நாமே தவிர்க்கமுடியாத இந்த தகராறை வளர்த்துவிட்டவர்களாக ஆகிறோம்.

'மேலும், இதில் நம் கதிமோட்சமும் அடங்கியிருக்கிறது. இந்தியாவைப்பற்றி அமெரிக்காவில் பரப்பிவரும் வெறுக்கத்தக்க பொய்யையும், திரித்துக்கூறும் மோசமான கட்டுக்கதைகளையும் நாம் தவிர்த்துக்கொண்டு இந்த தகராறில் தலையிடவேண்டும்.

'இங்கிலாந்திடமிருந்து சுதந்திரமும் விடுதலையும் பெற ஜார்ஜ் வாஷிங்டன் போராடியதுமாதிரி காந்திஜியும் போராடுவதால் அவர் இன்று விவேகமற்றவரென்று அழைக்கப்படுகிறார்.

'இந்தியர் சுதந்திரம் கேட்கிறார்கள். கிரிப்ஸ் அதை மறுத்தார். இந்தியா தனது சுதந்திரத்தைப் பெறுவது வரை போராட்டத்தை நிறுத்தவே செய்யாது என்று நான் எச்சரிக்கிறேன்.

'அட்லாண்டிக் சாஸனம் ஹிட்லரின் பிடியிலுள்ள எல்லா நாடுகளுக்கும் , வழங்கப்படுமென உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. அதே சாஸனம் இங்கிலாந்தின் பிடியிலுள்ள நாடுகளுக்கும் வழங்கப்படுமென்று உறுதி கூற வேண்டும். இல்லாவிடில் மற்றொரு மாபெரும் போராபத்தில் நாம் சிக்கிவிடுவோம். அந்த ஆபத்து ஆசியாதான்." என்று வின்யூடாங் கூறுகிறார்.

இந்தியா விஷயத்தில் அமெரிக்கா தலையிட்டாக வேண்டுமென்று கூறுகிறவர்களில் வென்டல் வில்கியும் ஒருவர். அமெரிக்கா இந்தியா விஷயத்தில் தலையிடாமலிருப்பதுபற்றி அவர் கூறுவதாவது:

"இந்தியர் கோரும் சுதந்திரத்தை ஒத்தி வைத்ததின் மூலம் கீழ்க்கோடி நாடுகளில் செல்வாக்கை இழந்தது

பிரிட்டன் அல்ல. அமெரிக்காதான் செல்வாக்கை இழந்தது என்று ஒரு சீன அறிஞர் என்னிடம் கூறினர். அவர் இதைக் கூறும்பொழுது, இந்தியாவிலிருந்துகொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு அவர் போராடவில்லை. அவர் என் மூலமாக அமெரிக்கருக்கு இதை அறிவித்தார். நாம் இந்தியா விஷயத்தில் மௌனம் சாதித்து வருவதன் மூலம் நமது செல்வாக்கை கீழ்க்கோடியில் ரொம்ப இழந்துவிட்டோம். நம்மை மதிக்கும் கீழ்க்கோடி மக்கள் இப்பொழுது நம்மைப்பற்றி சந்தேகங்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போய்விட்டது. அதற்குப் பதிலாக சுதந்திர நாடுகளைக்கொண்ட ஒரு பிரிட்டிஷ் காமன்வெல்த் இருக்கிறது என்று நாம் நினைக்கவேண்டும். பிரிட்டிஷ் காலனிகளெல்லாம், அவர்களது பழைய ஏகாதிபத்தியத்தின் மிச்சம் மீதங்கள் என்று நாம் கருதவேண்டும். இந்தியா நமது சொந்த பிரச்னை, ஜப்பான் அந்த 'உபகண்டத்தை' கைப்பற்றிவிட்டால், நாம்தான் நஷ்டமடைந்தவர்களாவோம். கீழ்க்கோடி மக்கள் மேற்கத்திய நாடுகளின் அடிமைகளாக இன்னும் இருக்கக்கூடாது என்று விரும்புகிறார்கள். உலகமக்களின் நலன் சர்வதேச பரஸ்பர உதவியின் கையில் அடங்கியிருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். ஏகாதிபத்தியம் ஒழியவேண்டுமென அவர்கள் திடமாக நம்புகிறார்கள். நாமும் அப்படியே கருதவேண்டும். இந்த யுத்தத்தில் நாம் முழு சக்தியையும் உபயோகிக்கப்போகிறோமென்பதை கீழ்க்கோடி மக்கள் அறிந்து இருக்கிறார்கள். ஆனல் தங்களுக்கு சுதந்திரத்தையும், விடுதலையையும் யுத்தத்திற்குப் பிறகு என்றில்லாமல், இப்பொழுதே கொடுக்கும்படி செய்ய நாம்

யாடுபடவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்" என்று வில்கி கூறுகிறார்.

" இந்தியா அமெரிக்காவின் சொந்த விஷயம். ஏனெனில் கோடிக்கணக்கான இந்தியர் நம்முடனிருந்து ஜப்பானை எதிர்க்கவேண்டுமென்று நாம் எதிர்பாக்கிறோம். இந்தியர் ஜப்பானியரை விரும்பவில்லை. அவர்கள் விரும்புவது எல்லாம் சுதந்திரம் தான். இதை நாம் உத்தரவாதம் அளிக்கவேண்டும். இதை எப்படி அளிப்பது? வெறும் வார்த்தைகளாலோ, உறுதிமொழிகளாலோ அல்ல.

'ஏனெனில் அவர்கள் சென்ற மகாயுத்தத்தில் வெகு தீவிரமாக நின்று போர் புரிந்தனர். வெற்றி கிடைத்ததும் உடனேயாவது சுதந்திரம் கிடைக்குமென்று நம்பி போராடினார்கள். வெற்றி கிடைத்த 2-வருஷம் வரை காத்திருந்தனர். பிறகுதான் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அதனின் ஒரு பகுதிதான் இப்பொழுது இந்தியாவில் நடக்கும் போராட்டம். ஆகவே மீண்டும் அவர்கள் உறுதிமொழியில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும், சியாங்-கே-ஷேக்கும் இந்தியா விஷயத்தில் தலையிடும்படி நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று அமெரிக்காவில் உள்ள பல பத்திரிகை ஆசிரியர்களும், நாவலாசிரியர்களும் இன்னும் மற்ற துறைகளில் உள்ள முக்கியஸ்தர்களும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.'

அமெரிக்காவிலுள்ள எல்லா அறிஞர்களும் பிரமுகர்களும் இந்தியாவைக் குறித்து இவ்வாறு கூறுவானேன் என்று நண்பர்கள் கேட்கலாம். பர்மாவிலும் மலேயாவி

லும் ஏற்பட்ட நிலைமை இந்தியாவிலும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் இதற்குக் காரணம். அதாவது பர்மா வில் ஜப்பானியர் படையெடுத்த சமயம் பிரிட்டிஷார் தரப்பில்நின்ற பிரஜைகளின் தொகை 100-க்கு 10 பேர் தானும். இவர்களும் குண்டுவீச்சு ஆரம்பமானதும் இந்தி யாவுக்கு ஓடிவந்து விட்டார்கள். பாக்கி 90 பேரில் 80 பேருக்கு யுத்தம் பற்றி அக்கரையே இல்லை. மீதி 10 பேர் பிரிட்டிஷாருக்கு விரோதமானவர்கள். இவர்கள் முன் னேறும் ஜப்பானியருக்கு உடந்தையாக இருந்து பிரிட்டி ஷாரைக் காட்டிக்கொடுத்தார்களாம்.

அந்த ஆபத்து நிலை இந்தியாவிலும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பது அமெரிக்க அறிஞர்களின் கவலை. பர் மாவில் ஏற்பட்டிருந்த மோசமான நிலைக்கு என்ன கார ணம்? பிரிட்டிஷ் ஆட்சி முறை அங்கிருந்த அலங்கோலம் தான் என்பதை நாம் அவர்களுக்கு சொல்லத் தேவை யில்லை.

அமெரிக்க அறிஞர்களின் முறையீடு பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டுக்கு தெரியாமலில்லை. இந்தியாவிலுள்ள உண்மை நிலைமையை அமெரிக்க ராஜாங்க இலாகா உன்னிப் பாக கவனித்து வருகிறது என்பதிலும் சந்தேகமே கிடை யாது.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் உள்ள தகராறை அமெரிக்க சாதாரண ஜனங்கள் அறிய முடியாமலிருந் தாலும், ராஜாங்கத்திலிருக்கும் அதிகாரிகள் அறியாம லிருக்கமுடியாது. ஆகவே ரூஸ்வெல்ட் இந்திய விவகாரத் தில் தலையிடுவாரா? அமெரிக்காவின் தலையீட்டின் பேரில்

இந்திய - பிரிட்டிஷ் பூசல்கள் தீர்ந்து சமாஸ மேற்படுமா?

இக்கேள்விகளுக்கு பதில் ஒரு வார்த்தையில் சொல்லி விடுவது சுலபந்தான். ஆனால் நாம் கூறும் பதில் சரியானதா தவறானதா? அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்பனவற்றை கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. பிற நாடுகள் தகராறில் அமெரிக்கா தலையிடுவது வழக்கமா என்பதையும் நாம் ஆராய்வது அவசியம்.

இதற்கு முன் அமெரிக்காவின் உதவியை எந்த நாடாவது தனது ஆபத்து சமயத்தில் கோரினது உண்டா? அப்பொழுது அமெரிக்கர் என்ன விதமாக பதில் கூறினார்கள்? என்பன போன்ற விஷயங்களையும் பரிசீலனை செய்யும்படி சரித்திரம் தூண்டுகிறது.

இவற்றை நாம் துருவிப் பார்த்துவிட்டு, பிறகு அமெரிக்கா தலையிடுமா, இடாதா என்று கூறினால், அதை நண்பர்கள் துவேஷத்தால் கூறப்பட்ட தீர்ப்பென்றோ, அல்லது பிற காரணத்துக்காக சொல்லப்பட்ட முடிவு என்றோ கூற முடியாதல்லவா?

## 3. அயர்லாந்துக்கு பட்டை நாமம்!

**1917-ம்** வருஷம். மகா யுத்தத்தின் கோரமான போர் நடக்கும் காலம். சப்மரைன் போரை நிறுத்த முடியாது என்று ஜெர்மனி எக்காளமிடுகிறது. நடு நிலைமை வகிக்கும் நாடுகள் திணறுகின்றன. முக்கியமாக அமெரிக்கா என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறது. பிரிட்டனுக்கோ சப்ளைகளை அனுப்பியாகவேண்டும். ஜெர்மனியோ கப்பல்களை மூழ்கடிப்பதாகக் கூறுகிறது. இதில் தயவு தாட்சண்யம் காட்ட முடியாது என்று கெய்ஸர் முழங்குகிறார். சப்ளைகள் தொலைந்தாலும் பரவாயில்லை. ஆனால் கப்பல்கள் போய்விட்டால் என்ன செய்வது? பிரஸிடெண்ட் வில்ஸன் இருதலைக் கொள்ளி எறும்பு போல தவிக்கிறார்!

அமெரிக்க ராஜாங்கத்திலுள்ள பலர், ஜெர்மனிமீது போர் துவக்கிவிட வேண்டியதுதான் என்று கூறுகிறார்கள். ஜெர்மனி யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டால் என்ன செய்வது? நேச நாடுகளுக்குக் கொடுத்த கடனை பிறகு எப்படி மீட்பது? கடனை வசூலிக்கவாவது போர் தொடுக்கவேண்டும். அதோடு 'ஆத்மார்த்திக' விஷயமும் நம்மைத் தூண்டவில்லையா? என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனபடி ஆகட்டுமென்று பிரஸிடெண்ட் வில்ஸன் கீழ்க்கண்ட பிரகடனத்தை 1917-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ம் தேதி யன்று வெளியிட்டார்:

"பிரஸிடெண்ட் மன்ரோவின் சித்தாந்தத்தை உலக சித்தாந்தமாக எல்லா நாடுகளும் ஏற்கவேண்டுமென நான்

கூறுகிறேன். அதாவது ஒரு தேசம் மற்றொரு தேசத்தின்மீதோ, ஜனங்களின்மீதோ தனது ஆட்சியை சுமத்த முயலக் கூடாது. மாறாக, ஒவ்வொரு தேச ஜனங்களும் தங்களுக்கு உசிதமான சர்க்காரையும், முன்னேற்றத்துக்கான பாதையையும் தாங்களே இன்னதென தீர்மானித்துக் கொள்ள விட்டுவிட வேண்டும்.

'அப்படி செய்வதைத் தடுக்கவோ, அல்லது செய்யக் கூடாதென, மிரட்டவோ, எதிர்ப்பைக் காட்டி பயமுறுத்தவோ கூடாது. இவ்விஷயத்தில் (சுயநிர்ணய உரிமை விஷயத்தில்) சிறு நாடென்றோ பெரிய நாடென்றோ வித்யாசம் கிடையாது.

'ஜனங்களின் சம்மதத்தைப் பெற்ற சர்க்கார் இருக்க வேண்டுமென்று நான் கூறுகிறேன். இவைதான்—அமெரிக்காவின் கொள்கைகள்—அமெரிக்கா அனுஷ்டிக்கும் முறைகள். இவற்றைத் தவிர வேறு எவ்வித கொள்கைகளையும் நாங்கள் ஆதரிப்பதில்லை. மேலும் ஒவ்வொரு முற்போக்குடைய ஆணும் பெண்ணும், இக்கொள்கைகளை ஆதரித்து நிற்கின்றனர். நவீன—விவேகமுடைய—ஒவ்வொரு தேசிய சமுதாயமும் இக்கொள்கைகளை ஆதரித்து நிற்கிறது. இவையே மனித ஜாதியின் கொள்கைகள். இவை என்றென்றும் நிலைத்திருக்கவேண்டும்.

'நிறுவும் சமாதானம் நீடிக்க வேண்டுமானால், அது சமத்துவமான உரிமைகளை அனைவருக்கும் வழங்கும் சமாதானமாக இருத்தல் அவசியம்."

இந்தப் பிரகடனம் வெளியானதும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் 'சபாஷ்' என்று ஆரவாரம் செய்தார்கள். பிரஸி

டெண்ட் வில்ஸன் கூறும் கொள்கைக்காகத்தான் பிரிட்டன் ஜெர்மனியுடன் போராடுகிறது என்று ஸ்ரீ. போனர் லா கூறினர். அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜூம் 'ததாஸ்து' என்றார். அதோடு 'தேசங்களின் உரிமைகள்—அது எவ்வளவு சிறிய தேசங்களானாலும் சரியே—ரொம்பப் புனிதமானது. பெரிய ஏகாதிபத்தியங்களின் உரிமைகள் எவ்வாறோ அதேபோல் தான் இந்த சிறுதேசங்களின் உரிமைகளும்' என்றார்.

வில்ஸன் பிரகடனம் விட்ட காலத்தில், பிரிட்டனுக்கு ரொம்ப சமீபத்தில், நேர் மேற்கே உள்ள அயர்லாந்து என்னும் ஒரு சிறு தீவில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

பிரஸிடெண்ட் வில்ஸனின் கொள்கையை 'தேசிய அயர்லாந்து பரிபூரணமாக ஆதரிக்கிறது என்றும், வில்ஸன் இக் கொள்கையை அயர்லாந்து விஷயத்தில் அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும்' என்றும், ஐரிஷ் மக்கள் கூறினார்கள்.

அதாவது "1152-ம் வருஷத்திலிருந்து அயர்லாந்தின் ஹிருதயத்தின்மீது தனது இரும்புக் காலை வைத்துக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் சர்க்காரை, காலை எடுத்துவிடுமாறு வில்ஸன் கோரவேண்டும். இந்தக் கோரிக்கையை சமாதான மகாநாட்டில் கூறுவதற்காக ஜோஸப் பிளன்கெட்டை பார்லிமெண்டுக்கு அபேக்ஷகராக அனுப்புகிறோம். அவரையே தேசிய அயர்லாந்து ஆதரிக்கவேண்டும். அயர்லாந்தின் விடுதலைக்காக 1916-ம் வருஷம் நடந்த புரட்சியில் அவர் தமது 3 குமாரர்களையும் பலி கொடுத்

தவர். யுத்தத்திலீடுபட்டிருக்கும் பெல்ஜியம், செர்பியா, பொஹிமியா, ருமேனியா, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு தனி சுதந்திரம் எவ்வாறு உண்டோ, அதே விதமான சுதந்திரம் அயர்லாந்துக்கும் உண்டு என்பதை சமாதான மகாநாட்டிலும், பிரஸிடெண்ட் வில்ஸனிடத்திலும் எடுத்துக் கூற அவர் பார்லிமெண்டுக்குச் செல்கிறார்" என்று அயர்லாந்தில் கோஷங்கள் கிளம்பின.

இந்தக் கோஷங்கள் அமெரிக்காவுக்கும் அனுப்பப்பட்டன. அமெரிக்காவிலிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஐரிஷ் மக்களும், பல அமெரிக்க பிரமுகர்களும் அயர்லாந்து விஷயத்தை அமெரிக்கா கவனித்தாக வேண்டுமென்று கூறினார்கள்.

பிரஸிடெண்ட் வில்ஸனின் பிரகடனத்தை வைத்துக்கொண்டு சுதந்திரம் கோரும் இந்த ஐரிஷ் தேசீய வாதிகளை பிரிட்டிஷ் சர்க்கார் சும்மா விட்டுவிட விரும்பவில்லை. இந்த உப தேர்தலில் ஜோஸப் பிளன்கெட்டை வெற்றி பெறாமல் தடுக்க தம்மாலியன்றவரை பிரிட்டிஷ் சர்க்கார் முயன்றது. பொதுக் கூட்டங்களுக்குத் தடையையும் தேசீய கோஷங்கள் கோஷிக்கக் கூடாதென வாய்ப்பூட்டு முதலியவைகளையும் பிரிட்டிஷ் அதிகாரிகள் விதித்தார்கள். கடைசியில் தேர்தலும் வந்தது. ஜோஸப் பிளன்கெட் 3,000 வோட்டுகள் பெற்றார். சர்க்காரின் மறைமுக ஆதரவைப் பெற்று நின்ற எதிர்க்கட்சி ஆளுக்கு 1,700 வோட்டுகள்தான் கிடைத்தன. அமெரிக்கா இந்தத் தேர்தலை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

இந்தத் தோல்வியை, அதாவது அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சியை அயர்லாந்து மக்கள் எதிர்க்கிறார்களென விளக்கும் இத் தோல்வியைக் கண்டு பிரிட்டிஷ் சர்க்கார் நடுங்கிற்று. நடுக்கத்தில் ஏற்படும் சினத்தால் என்னென்னவோ செய்தது. தேசீயக் கட்சியில் ஈடுபட்டிருந்த 26 பேர் பிப்ரவரி 23, 24-ந்தேதிகளில் கைதியானார்கள். 74 நாள் வரை பிரிட்டிஷ் சிறையில் உண்ணாவிரத மிருந்து செத்த டொரன்ஸ் மாக்ஸ்வினியும் கைதியான இந்த 26 பேர்களில் ஒருவர். இவர்கள் என்ன காரணத்துக்காக கைதியாகி இருக்கிறார்கள் என்பதை பிரிட்டிஷ் சர்க்காரால் அறிவிக்க முடியவில்லை. இதை டப்ளின் சர்க்காரின் பிரதம காரியதரிசியே ஒப்புக்கொண்டார்.

மேலும் 10 பேரை பிரிட்டிஷ் சர்க்கார் நாடு கடத்தியது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்த தேர்தலில் அடைந்த தோல்விக்காக எவ்வாறு வஞ்சம் தீர்த்ததென்பதற்கு கீழே காணும் சில குற்றச்சாட்டுகளே போதுமானவை.

மூவர்ணக் கொடியை பறக்க விட்டதாகவும், துவேஷத்தைக் கிளப்பும் தேசீயப் பாடல்களைப் பாடியதாகவும் பலர் கைதியானார்கள். 'ஈஸ்டர் வீக்' என்னும் ஒரு பாடலைப் பாடியதாக ஒரு சிறு பையனுக்கு 5 பவுன்கள் அபராதம். "நான் ஒரு ஸின்பீன் கட்சி ஆள்" என்று ஒருவன் கத்தியதற்காக 2 பவுன் அபராதம். பிரிட்டிஷ் சர்க்காரின் கோர்ட்டுகளை மதிக்க முடியாது என்று கூறிய நான்கு வாலிபர்களுக்கு ஆயுள் தண்டனை. இன்னும் இது மாதிரியான அடக்கு முறைகளை பிரிட்டிஷார் கையாண்டனர்.

அயர்லாந்து, பிரிட்டனின் மானத்தை வாங்குகிறது என்று பல தொழிற் கட்சி மெம்பர்கள் கிளர்ச்சி செய்

தார்கள். அயர்லாந்தில் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து தேசிய வாதிகளை அடக்கவேண்டு மென, கன்ஸர்வேட்டிவ் கட்சியினர் கூப்பாடு போட்டார்கள். லாயிட் ஜார்ஜுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அயர்லாந்து விஷயத்தில் அமெரிக்கா செலுத்தி வரும் கவனத்தைக் கண்டு லாயிட் ஜார்ஜ் மருண்டார். அதை வெளிப்படையாகவும் காமன்ஸ் சபையில் கூறிவிட்டார்.

"அயர்லாந்தில் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால் என்ன ஏற்படும்? அமெரிக்காவுடன் நேச உறவு ரத்தாக வேண்டியதுதான். அதோடு கானடாவிலும் ஆஸ்டிரேலியாவிலும் தென்னாப்ரிக்காவிலும் பிரிட்டன் மனக்கசப்பை சம்பாதிக்கும். ஜனங்களின் சுதந்திரத்துக்காகப் போராடுவதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் இதே சமயத்தில் அயர்லாந்தின் காதைப் பிடித்துத் தூக்கி, அதை யுத்தத்தில் திணிக்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று அவர்கள் கேட்கமாட்டார்களா?"

லாயிட் ஜார்ஜ் கூறியது உண்மை. சுதந்திரம் கோரி நிற்கும் அயர்லாந்தில், பிரிட்டனுக்கு இடமே கிடையாது. உலக சுதந்திரத்துக்காகப் போராடுவதாகக் கூறும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அயர்லாந்தில் ஜோலியே கிடையாதென எல்லா நாடுகளும் கூறின. முக்கியமாக அமெரிக்கர் அயர்லாந்துக்கு பரிபூர்ண அநுதாபம் காட்டுவதாகவும் கூறினர். அமெரிக்கப் பத்திரிகைகளும் பேராசிரியர்களும் அயர்லாந்தில் நடக்கும் பிரிட்டிஷ் அடக்குமுறை

ஆட்சியை காரசாரமாகக் கண்டித்தனர். இதை அறிந்து தான் லாயிட் ஜார்ஜ் கன்ஸர்வேட்டிவ் கட்சியினரை எச்சரித்தார்.

ஏப்ரல் மாதம் அமெரிக்கா ஜெர்மனி மீது யுத்தம் தொடுத்திருப்பதாகப் பிரகடனப் படுத்தியது. பிரிட்டிஷாரின் பக்கத்தில் அமெரிக்காவும் சேர்ந்துவிட்டது. அமெரிக்காவின் இந்த முடிவை பல பத்திரிகைகள் பாராட்டின. பிரிட்டன் பெரிய அதிர்ஷ்டசாலி என்று வாழ்த்தாத பத்திரிகைகள்-நாடுகள்-இல்லை. "பிரிட்டனும் அமெரிக்காவும் ஒத்துப்போவதில் இன்னும் ஒரே ஒரு விஷயம் தான் இடையூறாக இருக்கிறது. அதுதான் அயர்லாந்தின் விவகாரம்" என்று 'டெய்லி மெயில்' என்னும் பத்திரிகை எழுதியது.

"அமெரிக்காவில் ஐரிஷ் கட்சி ரொம்ப செல்வாக்கு வாய்ந்ததாக இப்போது இருக்கிறது. அமெரிக்காவுடன் பிரிட்டனுக்கு உள்ள சில பிரச்னைகளில் அயர்லாந்து விஷயம்தான் பெரும் பிரச்னையாக இருந்து வருகிறது. நம்மை (பிரிட்டனை) எதிர்க்கிறவர்களெல்லாம் அயர்லாந்திலிருக்கும் நமது ஆட்சியைத் தான் உதாரணமாக எடுத்துக்காட்டுகிறார்கள். நாம் சிறு நாடுகளின் சுதந்திரத்துக்காகப் போராடுகிறோமென்று கூறி வருவது முற்றிலும் உண்மையல்லவென்று அவர்கள்கூறி, அதற்கு உதாரணமாக அயர்லாந்தைக் காட்டுகிறார்கள்."

ஸர் ஸிஸில் ஸ்பிரிங்-ரைஸ் இதை 1917-ம் வருஷம் ஏப்ரல்மீ 13-ம்தேதி எழுதினார். முக்கிய அமெரிக்க நகரங்

களில் எல்லாம் அயர்லாந்துக்கு அநுதாபம் காட்டும் சுவ ரொட்டிகள் காணப்பட்டன. நடக்கும் பொதுக்கூட்டங்க ளில் எல்லாம் 'அயர்லாந்துக்கு சுதந்திரம் அளிக்கவேண்டு மென அமெரிக்கா கூறுகிறது' என்ற தீர்மானம் நிறை வேறியது.

அயர்லாந்திலுள்ள தேசீய வாதிகளெல்லாம் அமெ ரிக்கா யுத்தத்தில் இறங்கியதைக்கண்டு சந்தோஷம் கொண் டனர். அமெரிக்காவில் அயர்லாந்துக்கு ரொம்ப செல் வாக்கிருப்பதால், பிரஸிடெண்ட் வில்ஸன் ஐரிஷ் - பிரிட் டிஷ் தகராறில் தலையிட்டு ஒரு சமரஸம் கொண்டு வருவா ரென நினைத்தார்கள்.

"அயர்லாந்து ஒரு தனி தேசம். பிரிட்டனுக்கு அங்கு இடமே கிடையாது. அயர்லாந்தில் ஏற்பட்டிருக் கும் சர்க்கார் ஐரிஷ்காரனின் சம்மதத்தைப் பெறவில்லை. அயர்லாந்து மக்கள் விரும்பும் சர்க்காரை அவர்கள் ஏற் படுத்திக்கொள்ள அனுமதிக்கவேண்டும். பிரிட்டிஷ் சர்க் காரை அயர்லாந்து வாசிகள் ஆதரிக்கவில்லை என்பது சமீப தேர்தலின் வெற்றியிலிருந்து உங்களுக்குத் தெரியும். ஆகவே தாங்கள் கூறிவரும் சுயநிர்ணய உரிமையை அயர் லாந்து விஷயத்தில் அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யுங்கள்" என்று பிரஸிடெண்ட் வில்ஸனுக்கு தேசீய வாதிகள் செய்தி அனுப்பினார்கள். ராஜீய விவகாரங்க ளில் துளிகூட சிரத்தையில்லாத பிரபல பாதிரிகளும் அயர்லாந்தில் பிரிட்டன் நடத்திவரும் அடக்குமுறை ஆட் சியைக் கண்டித்தனர். அமெரிக்காவின் உதவியை நாடி செய்திகள் சென்ற வண்ணமாகவே இருந்தன.

அயர்லாந்தில் பிரிட்டிஷாரின் ஆட்சி என்ன தோரணையில் நடந்து வந்தது என்பதற்கு இன்னும் சில உதாரணங்களைக் கொடுக்கவேண்டியது அவசியமாகிறது. அயர்லாந்துக்கு சுதந்திரமளிக்கவேண்டுமென்று கோரின தேசபக்தர்களை பிரிட்டிஷ் சர்க்கார் கைது செய்துகொண்டு போயினரல்லவா? இந்தக் கைதிகளின் எண்ணிக்கை ஒன்றல்ல நூறல்ல. ஆயிரக்கணக்கில் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் கைதியாயினர். சிறையில் இவர்களுக்கும், களவு கொலை முதலியவை செய்த கிரிமினல் குற்றவாளிகளுக்கும் வித்தியாசமே காட்டப்படவில்லை. எல்லோரையும் ஒரே கொட்டடியில் போட்டடைத்து, பிரிட்டிஷ் சர்க்கார் வாட்டியது. இதை கைதிகள் ஆட்சேபித்தனர். அரசியல் கைதிகளுக்கு விசேஷ சலுகைகள் தரவேண்டுமென்றும், கிரிமினல் குற்றவாளிகளிடமிருந்து தங்களைப் பிரித்து தனியாக வைக்கவேண்டு மெனவும் கோரினார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் இந்த ஆட்சேபணையை, கூப்பாடு என்று கருதி வழக்கம்போல் இதர விஷயங்களைக் கவனிக்க ஆரம்பித்தது. 1917-ம் வருஷம் ஜுன் மாதம் 10-தேதி பிரிட்டிஷ் சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டித்து டப்ளினில் ஒரு மாபெரும் கூட்டம் நடந்தது. கவுன்ட் பிளன்கெட்டும், பிரகா என்னும் மாதும் கூட்டத்தில் பேசுவதாக ஏற்பாடு. கூட்டம் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென போலீஸார் கூட்டத்தில் பிரவேசித்து இருவரையும் கைது செய்தனர். கூட்டத்தினரின் ஆத்திரம் அதிகரித்தது. ஜனங்கள் ஆரவாரம் செய்து அவர்களை விட்டுவிடுமாறு கதறினர். போலீஸார் ஜனங்களைத் தாக்கவே இருதரப்பாருக்கும் கைகலப்பு வலுத்தது. அதில் போலீஸாரை தலைமை வகித்து நடத்தி

வந்த மில்ஸ் என்பவர் பலத்த காயமடைந்தார். அக்காயத்துக்கு இரண்டொரு நாளில் பலியும் ஆனார். தேசம் பூராவும் ஒரே ரகளை மயம்.

அயர்லாந்தில் நடக்கும் இந்த அலங்கோலத்தைக் கண்டு அமெரிக்கர் கொதிப்படைந்தனர். பிரஸிடெண்ட் வில்ஸன் இவ்விஷயத்தில் தலையிடாவிட்டால், நேச நாடுகளின் யுத்த லட்சியங்களெல்லாம் வெறும் வாய்ப்பந்தல் தான் என்று பல பத்திரிகைகள் எழுதின.

இதே சமயத்தில் பிரஸிடெண்ட் வில்ஸனுக்கு ஐரிஷ் தேசியக் கட்சியினர் ஒரு கடிதமும் எழுதினார்கள். அக்கடிதத்தில் பிரஸிடெண்ட் வில்ஸனின் சுய நிர்ணயக் கொள்கையை எடுத்துக் காட்டி, அயர்லாந்து பிரிட்டிஷ் சாக்காரின் ஆட்சியை விரும்பவில்லை என்று சுட்டிக் காட்டினர். இக்கடிதத்தில் டிவெலரா உள்பட பல பிரபலஸ்தர்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் அயர்லாந்தின் இப்போக்கைக் கண்டு சும்மா இருக்குமா? ஐரிஷ் சுதந்திரக் கட்சியினர் பூராவும் ஜெர்மனிக்கு உளவாளிகள்--5-ம் படையினரென்று உடனே எழுதின. பிரிட்டிஷ் மந்திரிகளும் ஓயாமல் இதே கருத்தை பிரசாரம் செய்துவந்தனர். அமெரிக்காவில் இந்த எண்ணத்தைப் பரப்ப, பிரிட்டிஷ் சர்க்கார் ரொம்பப் பாடுபட்டது.

ஐரிஷ் சுதந்திரக்கட்சியின் தலைவரான டிவெலரா இந்தப் பொய்ப் பிரசாரத்தை வன்மையாகக் கண்டித்தார். அயர்லாந்தை அடிமைப் படுத்துவதற்காக ஜெர்மனி அயர்

லாந்தின் மீது படையெடுத்தால், தாம் உள்பட எல்லா ஐரிஷ் மக்களும் ஜெர்மனியை எதிர்ப்போமென அறிவித்தார். டிவெலராவின் இந்த 'கூப்பாடு' எவ்வளவு தூரம் கேட்கும்? இந்த மறுப்பை பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிடங்களுக்குப் போகாதபடி தடுத்தனர்.

இந்த சமயத்தில் மற்றொரு சம்பவம் நடந்தது. அதாவது சிறையிலிருந்த சுதந்திரக் கட்சியினர் தங்களை ராஜீயக் கைதிகளாக நடத்தவேண்டுமென மீண்டும் கிளர்ச்சி செய்தனர். சிறை அதிகாரிகள் இந்தக் கிளர்ச்சியை என்ன விதமாக அடக்க முற்பட்டனர் என்பதை எழுத பக்கங்கள் போதா. கொட்டடியில் கிடக்கும் பெஞ்சுகளையும் நாற்காலிகளையும் படுக்கைகளையும் அப்புறப்படுத்தி கிளர்ச்சி செய்யும் கைதிகளைச் சித்திரவதை செய்தனர். காலில் அணிந்திருந்த பூட்ஸ்களையும் கழற்றிக்கொண்டு போயினர். இந்த அடக்குமுறை ஜபர்தஸ்து வலுத்தது. பிரிட்டிஷ் மேலதிகாரிகள் தம் குட்டி அதிகாரிகளின் இந்த திருவிளையாடல்களைக் கண்டிக்கவே இல்லை. மாறாக 'சபாஷ்' என்று சொல்லி தட்டிக்கொடுத்து வந்தனர். மேலதிகாரிகளே இப்படி நடந்துவந்தார்களென்பதை அறிந்த கைதிகள் உடனே உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

படுக்க படுக்கையும், சுகாதார வசதிக்கான காற்றோட்டமும் வேண்டுமென இந்த உண்ணாவிரதிகள் கோரினர். தாமஸ் ஆஷி என்பவர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார். சிறை அதிகாரிகள் பலவந்தமாக அவருக்கு உணவை உள் செலுத்தினார்கள். ஆஷியின் ஆவி பிரிந்தது! அவரது சடலத்தில் பலத்த காயங்கள் தென்பட்டன. சிறை அதிகாரிகளின் கொடு

மையால்தான் தியாகி ஆஷியின் ஆவி பிரிந்தது என்று பல கண்டனங்கள் கிளம்பின. பிரிட்டிஷ் சர்க்கார் இந்த கண்டனங்கள் வெறும் "காலிக்கூப்பாடு" என்று சொல்லியது. எனினும் இந்த துக்ககரமான செய்தி அமெரிக்காவையும் இதர நாடுகளையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

அயர்லாந்தில் நிலைமை மோசமாகிக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் லாயிட் ஜார்ஜை மீண்டும் சிலர் கட்டாய ராணுவ சேவை திட்டத்தை அயர்லாந்தில் அமுலுக்குக் கொண்டு வரும்படி கூறினார்கள். மந்திரி சபையிலும் இது சம்பந்தமாக நெருக்கடி கொண்டு வரப்பட்டது. லாயிட் ஜார்ஜும் லேசாக இசைந்தார். லாயிட் ஜார்ஜ் ராணுவ சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரப்போகிறார் என்ற செய்தி அமெரிக்காவுக்கு எட்டியதும் அமெரிக்காவில் மிகுந்த பரபரப்பு காணப்பட்டது. வில்ஸன் அவசியம் தலையிட்டே ஆகவேண்டுமென பல கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேறின.

அயர்லாந்துக்கு அநுதாபம் காட்டும் தோரணையில் தினசரி ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடந்து வருவதைக் கண்ட பிரஸிடெண்ட் வில்ஸன் லாயிட் ஜார்ஜுக்கு ஒரு ரகஸிய கடிதம் எழுதினார்.

அயர்லாந்தில் கட்டாய ராணுவ சேவை திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டாமென்றும், கொண்டு வந்தால் அமெரிக்காவில் அது பெருத்த கலவரங்களை ஏற்படுத்துமெனவும் எச்சரித்தார். லாயிட் ஜார்ஜ் அரை மனதுடன் கட்டின இந்த மனக்கோட்டை இடிந்தது.

வில்ஸன் தலையிட்டாரென்ற செய்தி அயர்லாந்துக்கு எட்டியது. சுதந்திரக் கட்சியினரெல்லாம் வில்ஸனைப் பாராட்டினார்கள். அமெரிக்காவின் தயவினாலும், உதார குணத்தாலும் அயர்லாந்து சுதந்திரமடைந்துவிடுமென சந்தோஷப்பட்டார்கள்.

அயர்லாந்தில் சுதந்திரக் கட்சியினரின் கை ஓங்குவதைக் கண்ட பிரிட்டிஷ் சர்க்கார் ரொம்ப கடுமையான நடிவடிக்கையை எடுத்தது. இதற்கு முக்கிய காரணம் அமெரிக்கா இத் தகராறில் தலையிடலாமென்றிருந்த நிலைமைதான்.

அமெரிக்கா, அயர்லாந்தின் தேசியக் கோரிக்கையை ஒப்புக்கொண்டு தலையிட்டால், பிரிட்டன் அயர்லாந்தை இழக்க வேண்டிய ஆபத்து இருந்தது. இந்த ஆபத்தை உணர்ந்த பிரிட்டிஷ் சர்க்கார் சும்மா இருக்குமா? அயர்லாந்திலுள்ள சுதந்திரக் கட்சியினர்மீது அடக்கு முறையை பிரயோகித்தது.

அவர்கள் வசித்து வந்த ஜில்லாக்களில் ராணுவ சட்டம் அமுலுக்கு வந்தது. தேசியக் கட்சியினரை போலீஸார் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் தாக்கினர். நடந்த துப்பாக்கிப் பிரயோகத்துக்கு கணக்கு வழக்கே கிடையாது. அயர்லாந்தில் இந்த அடக்கு முறை தர்பார் முழு வேகத்தில் நடந்துகொண்டிருக்கும் இதே சமயத்தில், அமெரிக்காவிலும் பிரிட்டிஷ் சர்க்கார் அயர்லாந்துபற்றி முழு பலத்துடன் பிரசாரத்தை நடத்தியது.

அயர்லாந்தை பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சி புரிவதால் லாபமே இல்லை என்றும், தம் ஆட்சி இல்லாவிடில் அங்

குள்ள *மைனொரிட்டி மதத்தினருக்கும் மெஜாரிட்டி வகுப்பாருக்கும் அடிதடி ஏற்பட்டு ரணகளமாகுமென்றும் பிரிட்டிஷ் மந்திரிகள் விடாமல் பிரசாரம் செய்தனர்.

இதற்குள் சென்ற மகா யுத்தம் முடிந்து சமாதான மகாநாடும் கூடிவிட்டது. அமெரிக்கா, அயர்லாந்து விஷயத்தில் தலையிடும் தருணம் வந்துவிட்டதாக அயர்லாந்து மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். பிரஸிடெண்ட் வில்ஸன் 1918-ம் வருஷம் டிசம்பர் மாதம் பாரிஸுக்குக் கிளம்பினார். அவர் புறப்படுவதற்கு முன்னர், நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கத்தோலிக்கப் பாதிரிகள் அயர்லாந்து விஷயத்தையும் சமாதான மகாநாட்டில் *கலந்தாலோசித்து தீர்க்க வேண்டுமென ஒரு கோரிக்கையை அவருக்கு அனுப்பினர்.

வில்ஸனே வற்புறுத்தி வரும் சுயநிர்ணய உரிமையை அயர்லாந்துக்கு பிரிட்டன் அளிக்கும்படி செய்யவேண்டுமென அக்கோரிக்கை கூறியது. டிசம்பர் 22-ம் தேதியன்று டப்ளினிலும் ஒரு மாபெரும் கூட்டம் நடந்தது. எல்லா ஐரிஷ் மக்களும் இக் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

பாரிஸ் செல்லும் வில்ஸன் அயர்லாந்துக்கு வர வேண்டுமென ஒரு அழைப்பை அக்கூட்டத்தினர் அனுப்பினர். அதோடு சமீப பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சியினர் பெருமித வெற்றி பெற்றதையும் அவர்களெல்லோரும் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கும் ஜனங்களின் பிரதிநிதிக ளென்பதையும் அக்கூட்டத்தினர் எடுத்துக் காட்டினர்.

---

மைனொரிட்டி மதத்தினர் = புராட்டஸ்டன்ட்ஸ்.
மெஜாரிட்டி வகுப்பார் = ரோமன் கத்தோலிக்கர்.

**1919**-ம் வருஷம் ஜனவரி மாதம் **2**-ம் தேதியன்று அயர்லாந்தில் சுதந்திரக் கட்சியினர் பூராவும் ஒன்று கூடி ஒரு பார்லிமென்டை ஸ்தாபித்திருப்பதாகப் பிரகடனப் படுத்தினார்கள். அயர்லாந்தை அந்த பார்லிமென்ட் ஒன்று தான் ஆளமுடியுமெனவும் பிரகடனம் செய்தனர். சமாதான மகாநாட்டில், பிரஸிடெண்ட் வில்ஸனிடம் இதை எடுத்துக்கூற ஒரு கமிட்டியும் ஸ்தாபிதமாகியது.

ஒவ்வொரு தேசமும் இந்த பார்லிமென்டை ஆதரித்து அங்கீகரிக்கவேண்டுமென ஒரு கோரிக்கையும் விடப்பட்டது. அமெரிக்காவில் இந்த பார்லிமென்ட் கூடியிருக்கும் செய்தி, பிரமாதமாக பிரசுரிக்கப்பட்டது. அமெரிக்க பத்திரிகைகளும் இந்த பார்லிமென்டை ஏக மனதாக ஆதரித்தன. வில்ஸனை உடனே, அவசியம் தலையிடுமாறும் கோரின.

பிரிட்டிஷ் சர்க்காரும் இதே சமயத்தில் அமெரிக்காவில் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தது. வில்ஸனிடம் அயர்லாந்தின் விஷயம், பிரிட்டனின் சொந்த விஷயமெனவும் கூறினார்கள் பிரிட்டிஷார். பிரிட்டிஷ் சர்க்காரின் இந்த முயற்சியை அமெரிக்க காங்கிரஸ் சபையில் பலர் பகிரங்கமாகக் கண்டித்தனர். பிரஸிடெண்ட் வில்ஸன், பிரிட்டனின் இந்த மிரட்டலைக் கண்டு அஞ்சக்கூடாதென்றும், அவசியம் தலையிட்டாகவேண்டு மெனவும் காங்கிரஸ் சபை மெம்பர்களில் பலர் கூறினர். காங்கிரஸ் சபையில் கீழ்க்காணும் தீர்மானமும் பிரேரபிக்கப்பட்டு நிறைவேறியது.

"பாரிஸில் கூடி, பல தேசமக்களின் உரிமைகளை ஸ்தாபித்துவரும் சமாதான மகாநாட்டினர், அயர்

லாந்தின் சுயநிர்ணயக் கோரிக்கையையும் கலந்து யோசிப்பார்களென அமெரிக்க காங்கிரஸ் சபை நம்புகிறது. அவ்வாறு கலந்து ஆலோசிக்கும்படியும் இந்த சபையினர் கேட்டுக்கொள்ளுகிறார்கள்."

இத்தீர்மானத்துக்கு சாதகமாக 261 பேர் வோட்டு கொடுத்தனர். எதிர்த்தவர் தொகையெல்லாம் 41 பேர் தான். இந்தத் தீர்மானம் வெளியானதும் பிரிட்டிஷ் சர்க்கார் நடுங்கியது. அமெரிக்காவிலுள்ள ஐரிஷ் அனுதாபிகள் சங்கத்தார் இதற்குள் மூன்று பிரதிநிதிகளை அயர்லாந்துக்கு அனுப்பி, அங்குள்ள நிலைமையை வில்ஸனிடம் தெரிவிக்குமாறு கூறினர்.

அந்த மூன்று பிரதிநிதிகளும் அமெரிக்காவில் ரொம்ப பிரபல்யமடைந்தவர்கள். இவர்களை பிரிட்டிஷ் சர்க்கார் அயர்லாந்துக்குள் அனுமதிக்க முடியாதென்று கூறியது. இவர்கள் பாரிஸுக்கே சென்று வில்ஸனிடம் முறையிட்டார்கள். வில்ஸனும் லாயிட் ஜார்ஜிடம் கூறி இவர்களுக்கு அனுமதி வாங்கி கொடுத்தார்.

இப்பிரதிநிதிகள் அயர்லாந்தில் இறங்கி அங்கு நடக்கும் அடக்குமுறையை அரை, குறையாகத் தான் பார்த்தனர். ஏனெனில், இவர்களுடன் "பாதுகாப்புக்காக" வந்த பிரிட்டிஷ் போலீஸார் இவர்களை பல இடங்களுக்கு அழைத்து செல்லவில்லை. ஓரிரு சிறைகளுக்கு மட்டும் கூட்டிச் சென்றனர். அந்த சிறைகளில் எந்தக் கைதியுடனும் பேசக்கூடாதெனக் கட்டளையிட்டனர்.

ஒருவாறாக இத் தூது கோஷ்டி தமது பயணத்தை முடித்துக்கொண்டு, மீண்டும் பாரிஸ் வந்து சேர்ந்தது.

அதாவது வில்ஸனிடம் உண்மை நிலைமையைக்கூற இப் பிரதிநிதிகள் வந்திறங்கினர். இதே சமயத்தில் அமெரிக்க செனட் சபை ஜூன் மாதம் 6-ம் தேதி (1919) ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

"அமெரிக்காவிலிருந்து அயர்லாந்துக்கு சென்றிருக்கும் இந்த மூன்று பிரதிநிதிகளையும் சமாதான மகாநாட்டுக்கு வரவழைத்து, அயர்லாந்தின் விஷயத்தை எடுத்துக் கூறுமாறு பிரஸிடெண்ட் வில்ஸன் சொல்லவேண்டும். அதோடு அயர்லாந்து மக்கள் விரும்பும் சுயராஜ்ய சர்க்கார் ஏற்படவேண்டுமென்றும் இந்த செனட் சபை கூறி, தமது அநுதாபத்தை ஐரிஷ் மக்களுக்கு தெரிவிக்கிறது."

என்று செனட் சபையின் தீர்மானம் கூறியது. இத் தூது கோஷ்டியினரும் பாரிஸ் போய்ச் சேர்ந்தனர்.

பிரஸிடெண்ட் வில்ஸன் என்ன செய்யப்போகிறா ரென்று உலகமே காத்திருந்த சமயம் வில்ஸன் ஜூன் மாதம் 11-ம் தேதியன்று கையை விரித்தார். அதாவது அயர்லாந்துக்கும் பிரிட்டனுக்கும் இருக்கும் தகராறு அவர்களின் சொந்த விஷயமென்றும், அமெரிக்கா அதில் தலையிட நியாயமே கிடையாதென்றும் கூறினார். அமெரிக்க காங்கிரஸ் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுவந்த அந்த மூன்று பிரதிநிதிகளுக்கு அளித்த பேட்டியில்தான் வில்ஸன் கையை விரித்தது.

"சுயநிர்ணய உரிமை எல்லா தேசத்துக்கும் உண்டு. சிறிய தேசமென்றோ, பெரிய வல்லரசு என்றோ இதில்

வித்தியாசம் கிடையாது. ஜனங்கள் விரும்பும் சர்க்காரை அவர்கள் ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை உண்டு. இதுவே அமெரிக்காவின் கொள்கை" என்று அன்று கூறினீர்களே யென தூதுகோஷ்டியினர் வில்ஸனிடம் கேட்டனர்.

'ஆமாம், அன்றைய நிலைமை வேறு, இப்போதைய நிலைமை வேறு' என்று பதிலளித்தார். "செனட் சபையும் காங்கிரஸ் சபையும் அயர்லாந்துக்கு சாதகமாக தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதைப் பார்த்தீர்களா?" என்று தூதுகோஷ்டியினர் மடக்கிக் கேட்டனர். 'அதனால் என்ன?' என்று வில்ஸன் பதிலளித்தார்.

தேசிய அயர்லாந்து இந்த பதிலைக் கேட்டதும் மனம் உடைந்தது. உள்ளம் துடித்தது. ஜனநாயகத்திலே பிறந்து, வளர்ந்துவரும் அமெரிக்காவே இப்படி நடக்குமா என்று உலகமே அதிசயித்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சர்க்காரின் பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ்மட்டும் சிரித்தார். ஏகாதிபத்திய வெற்றியின் களை, அந்த சிரிப்பில் பரிணமித்தது. 'அமெரிக்கா—அமெரிக்கா' என்று கதறின அயர்லாந்தின் நெற்றியில் பட்டை நாமம் ஏறியதுதான் மிச்சம்.

# 4. சீனாவுக்கும் அதே கதிதான்!

அமெரிக்காவை நம்பியிருந்த அயர்லாந்துக்கு பட்டை நாமம் போடப்பட்டதை முன் பக்கங்களில் படித்தோம். அயர்லாந்துக்கு எந்தவிதமான கதி ஏற்பட்டதோ அதே கதிதான் சீனாவுக்கும் ஏற்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?

சென்ற மகா யுத்தம் முடிந்ததின் பிறகு கீழ்க்கோடியில் ஒரு பெரிய போட்டிப் பந்தயம் நடந்தது. ஏழை சீனாவை யார் அதிகமாக சுரண்டுவது என்பதுதான் அந்த போட்டி. பிரிட்டனும் அமெரிக்காவும் இந்தப் போட்டியில் பெரும் பங்கெடுத்தன. ஜப்பானும் இந்த சமயத்தில் இப்போட்டியில் தீவிரமாக கலந்துகொண்டது. ஜப்பானின் தயவு இருந்தால்தான் சீனாவில் நல்ல சலுகைகள் கிடைக்குமென ஜான்புல் கருதினார். அதோடு ரஷ்ய பொதுவுடைமை சர்க்காரின் ஆதிக்கம், ஆசியாவிலும், கீழ்க்கோடியிலும் பரவாதபடி தடுக்க ஜப்பானைத் தூண்டிவிட்டால்தான் கதிமோக்ஷம் என்று ஜான்புல்லுக்குப்பட்டது. இதற்காக அமெரிக்காவை கைவிட்டுவிட்டு ஜப்பானின் முன் முழந்தாளிட்டார் ஜான்புல். ஜான்புல்லின் உதவியைப் பெற்ற ஜப்பான் தனது கடற்படையை பிரமாதமாக பெருக்கிக்கொண்டுவந்தது. ஜப்பானின் இந்த கடற்படைப் பெருக்கத்தைக் கண்ட அமெரிக்காவும், தனது கடற்படையைப் பலப்படுத்தியது. பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டத்தைப் பாதுகாப்பதற்காகவே அமெரிக்கா கடற்படையை

பெருக்குகிறது என்று அமெரிக்க பிரஸிடெண்ட் ஹூவர் பிரகடனப்படுத்தினார். ஹூவரின் இந்த முஸ்தீபைக் கண்ட ஜப்பான், கீழ்க்கோடியில் நிறத்துவேஷத்தைக் கிளப்பிவிட்டு, மேல் நாட்டாருக்கு கீழ்க்கோடியில் இடமில்லையென்று கூப்பாடு போட்டது. சீனாவை அமெரிக்கா சுரண்டி வாழப் பார்க்கிறதென்றும், சீனா பலவீனமடைவது ஜப்பானையும் பாதிக்குமென்றும் ஜப்பானியர் கூறினார்கள். நிறத்துவேஷத்தைக் கிளப்பிவிடும் ஜப்பானை மட்டந் தட்டவேண்டுமென்று அமெரிக்கரும் கூப்பாடு போட்டார்கள். இந்தக் கூப்பாட்டைக் கண்ட சர்வதேச சங்கம் பஸிபிக்கில் சீக்கிரத்தில் யுத்தம் மூளப்போகிறதோ என்று பயந்தது. யுத்தம் அவசியம் மூண்டே தீருமென எல்லா நாடுகளும் அஞ்சின. இந்த சமயத்தில் பிரஸிடெண்ட் ஹூவர் வாஷிங்டனில் ஒரு மகாநாடு கூட்டினார். அந்த மகாநாட்டுக்கு ஜப்பான், பிரிட்டன், சீனா, பிரான்ஸ், இத்தாலி, போர்ச்சுகல், பெல்ஜியம், ஹாலந்து ஆகிய 8 வல்லரசுகளையும் அழைத்திருந்தார். பஸிபிக்கில் நடந்துவரும் கடற்படை பெருக்க போட்டி மீண்டும் மகா யுத்தத்தில் கொண்டுவந்து விடுமென்றும், அதைத் தடுக்கவேண்டுமானால் ஒவ்வொரு தேசமும் தன் கடற்படையை குறைத்துக்கொள்ள வேண்டுமெனவும் ஹூவர் யோசனை கூறினார். இந்த யோசனையை எல்லா நாடுகளும் ஒப்புக்கொண்டன. இந்த 8 வல்லரசுகளும் யோசனையை ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு ஒரு விகிதாசாரப்படி கடற்படை பலத்தை வைத்துக்கொள்வதென ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டன. இதற்கு 9 வல்லரசுகளின் ஒப்பந்தம் என்று பெயர். இது 1923-ம் வருஷம் கையெழுத்தாகியது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்தானது சீனாவைப் பற்றியதாகும். அதாவது சீனாவின் ஆதிபத்திய உரிமைகளையும், சுதந்திரத்தையும், இந்த ஒப்பந்த நாடுகள் முழு மனதுடன் ஆதரித்து நிற்கின்றன. அதோடு மேற் சொன்ன உரிமைகள் பறி போகாமலும், பாதகமடையாமலும் பார்த்துக்கொள்ள ஒப்பந்த நாடுகள் உறுதி மொழி கொடுக்கின்றன. சீனாவை யாராவது தாக்கினால் இந்த நாடுகள் ஒன்று கூடி, சீனாவின் உதவிக்குப் போகவேண்டுமெனவும் ஒப்பந்தம் கூறியது. சுருங்கச் சொன்னால், சீனாவுக்கு பாதுகாப்பாளர்களாக இந்த 9 நாடுகளும் நிற்பதாக அறிவித்தன. 9 நாடுகளில் அமெரிக்காவே. பெரும் பொறுப்பை தாங்கியிருப்பதாக தோன்றியது.

கடற்படை பெருக்க விஷயத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் ஜப்பானும் ஒரு முடிவுக்கு வந்தன. அதாவது அமெரிக்காவும், பிரிட்டனும் பஸிபிக்கில் 5 பெரிய கப்பல்களை வைத்திருந்தால் ஜப்பான் 3 பெரிய கப்பல்களைத்தான் வைத்திருக்கவேண்டுமென தீர்மானம் செய்துகொண்டனர். அமெரிக்கா 5 கப்பல்களை வைத்துக்கொள்வதால், பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டத்தில் கடற்படைத் தளங்களையோ, இதர யுத்த சாதனங்களையோ பலப்படுத்தக் கூடாதென ஜப்பான் கூறியது. வேண்டுமானால் ஹாவாயீ தீவில்மட்டும் அமெரிக்கா கடற்படை தளம் கட்டிக்கொள்ளலாமென ஜப்பான் கூறியது. அமெரிக்க பிரஸிடெண்ட் இதற்கு இசைந்தார்.

பஸிபிக்கில் எங்கு யுத்தம் ஆரம்பமாகிவிடப்போகிறதோ என்று நடுங்கிக்கொண்டிருந்த சர்வதேச சங்கம் இந்த ஒப்பந்தத்தைக் கண்டதும் பயத்தை களைந்துவிட்டு,

பழையபடியும் உறங்கப்போய்விட்டது. ஜான்புல்லும் 'ரஷ்யக் கரடி'யைத் தடுக்கும் புண்ணிய கைங்கர்யத்தை மேற்கொண்டு, ஜப்பானை மீண்டும் நெருங்கினர். ஜப்பானியர் இந்த சமயத்தில் ரொம்ப சாதுர்யமாக நடந்துகொண்டனர். 9 வல்லரசுகளின் ஒப்பந்தம் பெரிய கப்பல்களுக்குத்தானே தடை விதித்திருக்கிறது என்று கூறி, சிறு கப்பல்களை ஏராளமாகக் கட்ட ஆரம்பித்தனர்! முதலில் இதை ரகஸியமாக செய்ய ஆரம்பித்தனர். ஜான்புல் தங்களுக்கு அனுசரணையாகவே இருப்பாரென்று நம்பிக்கைகொண்டு இதைப் பகிரங்கமாகவும் செய்ய ஆரம்பித்தனர். 1930-ம் வருஷத்துக்குள் ஜப்பானிடம் ஏராளமான சிறு கப்பல்கள் பெருகிவிட்டன. ஜப்பானின் ஆதிக்கம் பஸிபிக்கில் ஏற்பட்டுவிட்டது.

தங்களுக்கு கடற்படை ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது என்பதை உணர்ந்த ஜப்பானியர் நீண்ட காலம்வரை சும்மாவிருக்கவில்லை. 1931-ம் வருஷமே ஜப்பான் மேலை நாட்டாருக்கு சவால் விடுக்க ஆரம்பித்துவிட்டது. சீனுவுக்கு சொந்தமான தெற்கு மஞ்சூரியாமீதுதான் ஜப்பானின் திருநோக்கு முதலில் விழுந்தது. மக்டன் என்னுமிடத்துக்கு அருகே உள்ள ஒரு ரயில் பாதையில் சீனர் வெடிவைத்து தகர்த்துவிட்டதாகவும், அந்த ரயில் பாதை ஜப்பானியருக்கு சொந்தமானதால் ஜப்பான் இம்மாதிரியான அதிக்கிரமச் செயலை சகித்துக்கொண்டிருக்க முடியாதெனவும் ஜப்பானிய பிரதம மந்திரி முழங்கினர். இந்த வெடி விபத்து செப்டம்பர் மாதம் 18-ம் தேதி இரவில் நடந்தது. மறுநாட் காலைக்குள் ஜப்பானியத் துருப்புகள் மஞ்சூரியாமீது படையெடுத்துவிட்டன. சொல்லிவைத்தாற்போல் ஜப்பானியத் துருப்புகள் திமுதிமு

வென உள்நுழைந்து கேந்திர ஸ்தானங்களை கைப்பற்றின. ஒரு சிறு வெடி விபத்துக்காக இந்த ஆக்கிரமிப்பா என்று உலகமே குமுறியது. ஜப்பானின் இந்த செய்கை முன்னேற்பாடாக செய்யப்பட்டதென்றும், வேண்டுமென்றே ஜப்பானியர் தாங்களே வெடிவைத்துவிட்டு சீனர் மீது பழியை சுமத்திவிட்டார்களென்றும் எல்லா நாடுகளும் கூறின. மஞ்சூரியாவை பிடிப்பதற்கே ஜப்பான் இந்த தந்திரத்தைக் கையாண்டது என்று சீனர் கதறினார்கள். 9 வல்லரசுகளின் ஒப்பந்த கர்த்தாவான அமெரிக்காவை நோக்கி ஏழை சீனா நியாயம் கேட்டு கதறியது. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரிட்டனையும் சீன மக்கள் 'இது நியாயமா?' என்று கேட்டனர். ஜப்பானின் இந்த அடாபிடித்தனத்தை அமெரிக்கா லேசில் விடாது என்றும் அனைவரும் எதிர்பார்த்தார்கள். ஒருபுறம் அமெரிக்காவும், மற்றொருபுறம் சர்வதேச சங்க நாடுகளும் ஒன்று சேர்ந்து ஜப்பானை ஒரே நாளில் முறியடிப்பார்களென எல்லோரும் எதிர்பார்த்தார்கள். அமெரிக்க பிரஸிடெண்ட் இந்த சமயத்தில் என்ன செய்தாரென்பதுதான் ரொம்ப ருசிகரமான விஷயம்.

ஹூவர் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்:

"ஜப்பானின் செய்கை தவறானது...... (ஆனால்.) ஜப்பானின் இந்த செயல்கள் அமெரிக்கரின் சுதந்திரத்தையோ, எதிர்கால பொருளாதார அல்லது ஆத்மார்த்திக வாழ்வையோ ஆபத்துக்கு உள்ளாக்கவில்லை. மேற்சொன்ன இவைகள் பாதிக்கப்படாதிருக்கும்வரை அமெரிக்கரின் உயிர்களைத் தியாகம் செய்யுமாறு நான் ஒருபோதும் கூறமாட்டேன்...... ஆகவே யுத்தத்தையோ, அல்லது, பொருளாதார,

ராணுவ வகைகளின் மூலம் நிர்ப்பந்தங்களையோ நாங்கள் (ஜப்பான் மீது) சுமத்தப் போவதில்லை. ஏனெனில் இவை நம்மை போரில் இழுத்துக் செல்லும் பாதைகளாகும்."

சீனாவுக்கு இந்த பதிலை அனுப்பிவிட்டு அமெரிக்கா பேசாமல் உட்கார்ந்துவிட்டது. ஜான்புல்லும் வாய் பொத்தி கைகட்டி நின்றுவிட்டார். ஜப்பான் மஞ்சூரியாவில் தனிக்காட்டு ராஜாவாக வேட்டையாடி, தனது ஏகாதிபத்தியக் கொடியை நாட்டியது. அமெரிக்காவை எதிர்பார்த்திருந்த சீனாவும் ஏமாந்தது.

அமெரிக்கா அயர்லாந்து விஷயத்தில் நடந்து கொண்டதற்கும் சீனா விஷயத்தில் நடந்து கொண்டதற்கும் ரொம்ப வித்யாசமுண்டு. எப்படி என்றால்? அயர்லாந்துக்கு உதவி அளிக்க வேண்டுமென்று அமெரிக்காவுக்கு நிர்ப்பந்தமில்லை. சீனா விஷயத்திலோ நிர்ப்பந்தமிருந்தது. எனினும் அமெரிக்கா, சீனா என்ற அந்நிய தேசத்திற்காக ரத்தத்தை சிந்தவோ, தனது வியாபாரத்தைப் பாழ்படுத்திக்கொள்ளவோ விரும்பவில்லை. இந்தியா விஷயத்திலும் அமெரிக்கா இப்படிதான் நடக்கும். இந்தியரின் சட்ட பூர்வமான அபிலாஷைகளின்மீது அமெரிக்காவுக்கு அநுதாபம் இருந்தாலும் அமெரிக்கா தலையிடப்போவதில்லை. ஏனென்றால் பிரிட்டனின் மனக்கசப்பை அமெரிக்கா சம்பாதிக்க நேரிடும். அதோடு பிரிட்டனின் தயவு இருந்தால் இந்தியா போன்ற பெரிய மார்க்கட்டில் அமெரிக்க சாமான்களையும் கரையேற்றி வைக்கலாம். ஆகவே பிரிட்டனின் மனதுக்கு ஒத்தபடி மௌனம் சாதித்துவிட்டு மார்க்கட்டில் காலூன்றலாமல்லவா? இதைவிட்டு விட்டு, இந்திய

ருக்கு சுயராஜ்யத்தை வாங்கித்தரும் 'புத்திகெட்ட' காரியத்தை அமெரிக்கா செய்யாது. பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டும் அவரது அன்பிற்குரிய ராஜாங்க இலாகாவும் இந்திய அரசியல் நெருக்கடியை கவனித்துக்கொண்டே இருப்பார்கள். உன்னிப்பாகக் கவனிப்பதாகக்கூட கூறுவார்கள். யுத்தம் முடியும் வரையும், சமாதானமகாநாடு கூடி முடியும் வரையும் கவனிப்பார்கள். பிறகு வில்ஸனும், ஹூவரும் செய்ததைப்போல ஏழை இந்தியாவையும் கூப்பிட்டு ரூஸ்வெல்ட் நாமம் போடுவார். இது ரூஸ்வெல்ட் போன்ற பிரஸிடெண்டுகளுக்கு சர்வ சாதாரணம். ஆகவே அமெரிக்கா இந்திய ராஜீய நெருக்கடியில் தலையிட்டு நமக்கு சுயராஜ்யம் தரும்படி பிரிட்டனிடம் வற்புறுத்துமென யாராவது நினைத்தால் அது தவறான நினைப்பு. அதோடு பகற் கனவும் ஆகும்.



இ ஜூபிடர் பிரஸ் லிமிடெட், சென்னை.

# கலியாண காலங்கள் நெருங்கிவிட்டது




தபால் பெட்டி. 139 போன் : 281 A.


Wrapper Printed at The Commercial Printing & Publishing House.
46, Muthumari Chetty Street, G. T., Madras